**PRESS RELEASE**

**10 December 2016**

**JOB FAIR**

**"LINK-2017"**

**INITIATIVE OF DIRECTORATE OF INFORMATION TECHNOLOGY**

**in association with ICT ACADEMY of Tamilnadu.**

**Date:** 17th Dec 2016 **Venue:** Pondicherry Engineering College

**Government of Puducherry through Directorate of Information Technology in association with ICT Academy of Tamilnadu is organizing a Job Fair in Puducherry on 17th December 2016 at Pondicherry Engineering College, Kalapet, Puducherry.**

Directorate of Information Technology, Government of Puducherry in association with ICT Academy of Tamil Nadu and in co-ordination with Directorate of Higher and Technical Education is imparting training under IT Finishing school programme to the students studying in the final year of all Government and Private Engineering colleges, Polytechnic, Arts and Science Colleges to increase their employability skills. So far 5274 students have been trained at a cost of around 1.5 Crores and 2190 students have been placed so far.

At present, there are 18 Arts and Science Colleges, 13 Engineering Colleges and 6 Polytechnic Colleges (both Government and Private) in the U.T. of Puducherry. In total, there are around 8000 graduates pass out every year and are in search of jobs in open market.

In order to increase the employment opportunity for the students in all Government and Private Engineering, Polytechnic, and Arts and Science Colleges, Directorate of Information Technology in association with ICT Academy of Tamilnadu is now organizing a Job Fair for the state of Puducherry under the name **"Link-2017"** at Pondicherry Engineering college on 17th of Dec 2016 in the history of Puducherry, first time.

This Job Fair will be attended by around 3000 students from Engineering, Arts and Science, Polytechnic colleges in the State of Puducherry. Around 30 leading Companies of IT & ITeS such as Tech Mahindra, Technosoft, Mobius Knowledge Services, Lenova, Kaar Technoligies, Allsec Technologies, Adaptavant Technologies, Sutherland, Newgen Knowledge Services will be participating in this Job Fair. Around 2000 vacancies are to be filled up in this job fair. At the end of this drive, all the selected students will be issued with offer letters.

A separate website has been developed for the job fair which can be accessed using the link http://pdy.ictacademy.in/IPD2016. All interested students are requested to register online for attending the Job Fair at free of cost. All final year engineering,Arts & Science and Polytechnic College Students and 2016 passed out student can attend this job fair. The students registering for the job fair has to bring copies of resumes.

The Academic Institutions of Puducherry are advised to motivate their students to attend the job fair and grab the employment opportunity.

The main aim of conducting such job fair is to ensure the right talent of Puducherry are placed in ace companies and make their life shine.

Government of Puducherry envisions creating huge employment opportunities for the students of Puducherry. ICT Academy of Tamilnadu that endeavors zeroing down the skill gap and industry-academia gap in the country also envisions launching "Link" as a service to mitigate the placement gap.

This Job Fair is sure to increase the employment opportunity for the students in all Government and Private Engineering, Polytechnic, and Arts and Science Colleges, The Directorate of Information Technology have joined with ICT Academy of Tamilnadu in exercising this first ever noble initiative for the betterment of the students of Puducherry.

*****

## நாளிதழ் செய்தி குறிப்பு

**10 திசம்பர் 2016**

## வேலைவாய்ப்பு மேளா

## "2017 இணைப்பு"

## தகவல் தொழில்நுட்பத்துறையும் தமிழ்நாடு ICT அகாடமியும் இணைந்து எடுக்கும் ஓர் முயற்சித்திட்டம்

**நாள் – 17.12.2016** **இடம் – பாண்டிச்சேரி இஞ்சினீரிங் கல்லூரி**

புதுச்சேரி அரசு, தகவல் தொழில்நுட்பத்துறை தமிழ்நாடு ICT அகாடமியுடன் இணைந்து வரும் 17.12.2016 ஆம் நாளன்று புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள பாண்டிச்சேரி இஞ்சினீரிங் கல்லூரியில் வேலைவாய்ப்பு மேளா நடத்த உள்ளது.

புதுச்சேரி அரசு, தகவல் தொழில்நுட்பத்துறை தமிழ்நாடு ICT அகாடமியுடனும் உயர் மற்றும் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்துடனும் இணைந்து அனைத்து அரசு மற்றும் தனியார் தொழில்நுட்ப கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்நுட்ப கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்த IT Finishing School என்ற திட்டத்தின் கீழ் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இது வரை, 1.5 கோடி செலவில் 5,274 மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, 2,190 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பும் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, புதுச்சேரியில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 18 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 13 தொழில்நுட்ப கல்லூரிகளும், 6 பல்நுட்ப கல்லூரிகளும் உள்ளன. இக்கல்லூரிகளில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 8000 மாணவர்கள் படிப்பை வெற்றிகரமாக முடித்து, வேலை தேடி வெளி [illegible] வருகின்றனர்.

அனைத்து அரசு மற்றும் தனியார் தொழில்நுட்ப கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்நுட்ப கல்லூரிகளின் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகப்படுத்திட புதுச்சேரி அரசு, தகவல் தொழில்நுட்பத்துறை தமிழ்நாடு ICT அகாடமியுடன் இணைந்து வரும் 17.12.2016 ஆம் நாளன்று புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள பாண்டிச்சேரி இஞ்சினீரிங் கல்லூரியில் "2017 இணைப்பு" என்றொரு வேலைவாய்ப்பு மேளாவை புதுவையில் முதன் முறையாக நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்த வேலைவாய்ப்பு மேளாவில் பங்கு பெற அனைத்து அரசு மற்றும் தனியார் தொழில்நுட்ப கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்நுட்ப கல்லூரிகளை சேர்ந்த சுமார் 3,000 மாணவர்கள் வருவார்கள். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் புரியும் சுமார் 30 பெரிய நிறுவனங்கள் இந்த மேளாவில் பங்கு பெற்று, சுமார் 2,000 மாணவர்களை தேர்வு செய்து தங்கள் நிறுவனங்களில் வேலை சேர்வதற்கான ஆணைகளை வழங்க உள்ளன. (சில நிறுவனங்களின் பெயர்கள் – டெக் மகேந்திரா, டெக்னோசாப்ட், லெனோவோ, சுதர்லேண்ட் முதலியன).

http://pdy.ictacademy.in/IPD2016 என்ற இணைய இணைப்பு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள அனைத்து மாணவர்களும் இந்த இனணயதளத்தில் இலவசமாக தங்களது பெயரை பதிவு செய்யலாம். 2016ல் கல்லூரி படிப்பை முடித்த அனைத்து மாணவர்களும், கல்லூரி இறுதியாண்டு படிக்கும் மாணவர்களும் இந்த வேலைவாய்ப்பு மேளாவில் பங்கு பெறலாம். இந்த வேலைவாய்ப்பு மேளாவில் பதிவு செய்யும் மாணவர்கள் தங்கள் சுயகுறிப்பு நகல்களை எடுத்து வரவேண்டும்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து கல்லூரிகளும் தங்கள் கல்லூரி மாணவர்களை இந்த வேலைவாய்ப்பு மேளாவில் பங்கு பெற ஆவண செய்து, அதிகபட்ச வேலைவாய்ப்பை பயன்பெற வேண்டும்.

இத்தகைய வேலைவாய்ப்பு மேளாவின் முக்கிய நோக்கமே நம் புதுச்சேரியின் அனைத்து அரசு மற்றும் தனியார் தொழில்நுட்ப கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்நுட்ப கல்லூரிகளை சார்ந்த திறம்பட்ட மாணவர்கள் சிறந்த நிறுவனங்களில் வேலை பெற்றுத்தந்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே ஆகும்.

இத்தகைய மேம்பட்ட நோக்கத்திற்காகவே புதுச்சேரி அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை தமிழ்நாடு ICT அகாடமியுடன் இணைந்து வரும் 17.12.2016 ஆம் நாளன்று புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள பாண்டிச்சேரி இஞ்சினீரிங் கல்லூரியில் வேலைவாய்ப்பு மேளா நடத்த உள்ளது.

-oOo-